RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS
DOI:10.34256/irjt22s137

# பரிபாடலில் தொன்மங்கள்

## இல. பிரவீன் பீற்றர் ஞானையா [அ, *]

[அ] தமிழ்த்துறை, நாசரேத் மர்காஷிஸ் கல்லூரி, பிள்ளையன்மனை, நாசரேத்-628617, தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.

# Myths in Paripadal

## L. Praveen Peter Gnaniah

[a] Department of Tamil, Nazareth Margoschis College, Pillaiyanmanai, Nazareth–628617, Thoothukudi, Tamil Nadu, India.

* Corresponding Author: praveenpeter1@gmail.com

Received: 11-03-2021
Revised: 28-02-2022
Accepted: 03-02-2022
Published: 28-02-2022

Check for updates

### ABSTRACT

Paripadal one of the Sangam Literature's is unique in itself. It acquired the specialty of "Ongu" Another meaning on Paripadal is "Music" Penn (the melodic used by the Tamil People in their Music) is allotted for Paripadal. For no other book are the Panns divided in this way. This book is the first book where the songs are not complied on the basis of subjects or the names of the poets but on the basis of PannsThis book has theatrical system mode.It includes the three elements pros,Music,and drama paripadal involves two themes.This book becomes unique in highlighting.Only about padyas.The objective of this thesis is it analyze the antiquities of paripadal.

**Keywords:** Thaadhai, PozharguPunal, Pink Neghizha, Vidhalam, Tharaadhalam Irasaasuvam, Adhalam, Urambu, Irubu, Kariyavan.

## முன்னுரை

'மைத்' அல்லது 'மைத்தாலஜி' என்ற ஆங்கிலச் சொல் தமிழ் மொழியில் தொன்மையை குறிப்பிடுகின்றது. தொன்மத்தை தொல்காப்பியர்,

"தொன்மைதானே

உறையோடு புணர்ந்த பழைமை மேற்றே" (Ilampooranar, 2000)

"தொன்மம் என்பது இலக்கியங்களில் ஆன்மாவாகும்" முனைவர். சுபாஷ்,2000) அரிஸ்டாட்டில் தொன்மங்கள் பொய்களின் புகலிடம் அல்ல ,உண்மைகளின் இருப்பிடம், கருத்துக்களின் வாழ்விடம், எண்ணங்களிலன் வரலாற்றுப் பெட்டகம் என்கிறார். இத்தொன்மை இறந்த காலத்தோடு நின்று விடாமல் நடப்பியலோடும், எதிர்காலத் தோடும் ஒன்றிணைந்த ஒன்றாக அது வெளிப்பட்டு வருகிறது. தொன்மம் என்பது பழமை என்றே கூறுவர். தொன்மத்தை புராணக்கதை பழங்கதை தொல் படிவம் என்றும் குறிப்பிடலாம். தொன்மம் மக்களின் நம்பிக்கை சார்ந்த ஒன்றாகும். பரிபாலில் 22 பாடல்களில் வையை நீங்கலாகத்திருமால் செவ்வேள் பற்றிய பாடல்களில் மிகுதியாக தொன்மை பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன.

"பொருவேம்என்றவர்மதம்தபக்கடந்து

செருமேம்பட்டசெய்தீர்அண்ணல்

இருவர்தாதை" (Somasundaram, 2009)

## திருமால்

பரிபாடலில் திருமாலின் பெரும் பாலான அவதாரங்களையும் அவற்றைப் பற்றிய தொன்மைக் கதைகளும் இடம்பெறுகின்றன. திருமாலின் அவதாரங்களை 'வராகம்' 'நரசிங்கம்' 'வாமனன்' 'கண்ணன்' 'பலதேவன்'என்னும்ஐந்தினைமுதன்மைப்படுத்திக்கூறுகின்றது.

1.திருமால் அன்னப்புள்ளாய் தோன்றுதல்:

சிறகால் வெள்ளத்தைப் புலப்படுத்தியது......

"மாவிசும் பொழுகு புனல் வறனவன்னம்

சேவலாய்ச் சிறகாகப் புலர்த்தியோயெனவும்" (Somasundaram, 2009)

2.விண்ணோர்க்கு அமிழ்த்தளித்தது:

"நகையைச் சாகநல்லமிர்துகலந்த

நடுவுநிலை திறம்பியநயமி லொருகை" - (Somasundaram, 2009)

3.அவுணர்களை அழித்தது:

"தனிநிலங்கடந்தக்காற்றறிந்தியர்ந்தகன்றோடி

அன்னவர்படவல்லாலவுணர்க்குமுதல்வன்

நின்னஞ்சிக்கடற்பாய்ந்தபிணிநெகிழ்பவிழ்தன்பர்" (Somasundaram, 2009)

4.கருடனின் செருக் கொழித்தது:

"சேவலூர்கியுஞ்செங்கண்மாஅல்

ஓதவனக்கிளக்குங்காலமுமுதல்வனை" (Somasundaram, 2009)

5.திருமாலின் உந்தித் தாமரையில் நான்முகன் தோன்றியது:

"மாயாவாய் மொழியுரைதரவலந்து

வாய்மொழி யோடை மலர்ந்த

தாமரைப் பூ வினும்பிறந்தோனும்தாதையும்" (Somasundaram, 2009)

## பலதேவன்

திருமால் சங்கின் நிறத்தை ஒத்த வெண்ணிற முடைய பல தேவனுக்கு இளையவன் என்றும், பலதேவனுக்குய முனைநீல ஆடையை வழங்கிற்று என்னும்பு ராணம்ச்செய்திகுறிப்பிடுகிறது.

"நீயேவளையோடு புரையும் வாலியோற்கு அவன்

இளையன் என்போக்கு இனைய ஆதலும்

புதைஇருள் உடுக்கைப் பொலம்" (Somasundaram, 2009)

## அசுரர்களை அழித்தல்

திருமாலின் கையிலுள்ள வலம் புரிச்சங்கு முழங்கும் போது உள்ள உறுதி, சிறிதும்குறையாமல், குறையாத எழுச்சியுடன் திருமாலோடு போர் செய்ய எதிர்வந்து நின்றஅசுரர்களின் கொடிகள் அற்று முறிந்து வீழ்ந்தன. அவர்களின் செவிகள் செவிடாயின. அவர்களின் முடிகள் அதிர்ந்தன என்ற செய்தி**களை** பரிபாடலில் காணலாம்.

"முடிகள் அதிரபல் படிநிலை தளர

நனிமுதல் வளைமுடி அழிபுஇழிவு

தலை இறுபுதாரோடு புரள" (Somasundaram, 2009)

## தொன்மம் குறிப்பிடும் கீழ் உலகம்

"ஏலர் வயங்கு பூண் அமரரை வெளவிய அமிழ்தின்

பாடுவார் பாடும்வகை" (Somasundaram, 2009)

விண், மண், பாதலம்என்னும்மூவகைக்பட்டஉலகங்களுள்கீழ்உலகம் (பாதாளம்) ஏழினையும் எஞ்சாது தன்திருவடி ஒன்றினால் திருமால் அளந்ததாகத் தொன்ம வரலாறு கூறுகின்றது.

1. அதலம்
2. விதலம்
3. தராதலம்
4. மகாசுலம்
5. இரசாசுவம்
6. பாதாளம்

## வினதை தொன்ம வரலாறு

இந்திரன் குதிரைவால் தூய வெண்மை நிறமுடைய தென்று வினதை கூறினாள். அதனைக் கேட்ட கத்துரு என்பவன் அக்குதிரையின் வால் கரியது என்றான். கரியாதாயின் உனக்கு அடிமையாவேன் என்றாள் வினதை கத்துருதன் மக்களால் அக்குதிரையின் வால் கரியதாகத் தோன்று மாறுசூழ்ச்சி செய்து வினதையை அழைத்துக்காட்ட, வினதைதன் தோல்வியை ஒப்புக் கொண்டு கத்துருவுக்கு அடிமையானாள். தேவாமிழ்தத்தைக் கவர்ந்துதனக்குந்தந்தால்வினதையை விடுதலை செய்வதாகக்கத்துரு கூறினான். இச்செய்தியை அறிந்த கருடன் காவலாக இருந்த தேவர்களை விரட்டிவிட்டு அவ்அமிழ்தத் தினைக் கொண்டு வந்துகத்துரு வினிடம் கொடுத்து தன்தாயின் அடிமைத்தனத்தை நீக்கினான்.

"பயந்தோன்இடுக்கண்நனைந்தபுள்ளின்

நிலவந்துஒங்குஉயர்கொடிச்சேவலோய்" (Somasundaram, 2009)

## அறிவியல் சார் தொன்மம்

பூமி தோற்றத்திற்கு அறிவியல் சார் கூறுகள் அடிப்படையாக அமைகின்றன. அண்ட சராசரங்களை எல்லாம் பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரமன்படைத் தான் என்றும், பாற்கடல் பல பொருள்களைத் தோற்றுவித்தது என்றும் புராணங்கள் கூறுகின்றன. அப்பாற்கடலில் இருந்து நெருப்பு, காற்று, விண், மண், நீர் என்னும் ஐம்பூதங்களும் கதிரவனும் மதியும் வேள்வி முதல் வனாகிய இயமானனும் கோள்கில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்னும் ஐந்து கோள்களும், திதியின் பிள்ளையாகிய அரக்கரும், விதியின் மக்களாகிய ஆதித்தர்குதிரையின் வயிற்றியில் பிறந்த அசுவணித்தேவர் இருவரும் கூற்றுவனும் மூவகைப்பட்ட 21 உலகங்களும் அவ்வுலங்களில் வாழும் உயிர்க்கூட்டங்களும் இவையல்லாம் பாற்கடலில்இருந்து தோன்றியது என்பதை,

"தீவளி விசும்புநிலன் நீர் ஐந்தும்

ஞாயிறும் திங்களும் அறனும் ஐவரும்

திதியின் சிறாரும் விதியின் மக்களும்

மாசு இல் எண்மரும் பதினொருகபிலரும்

..............................................................

மாயோய்நினவயின்பரந்தவைஉரைத்தோம்" (Somasundaram, 2009)

என்று பரிபாடல் விளக்குகிறது. இப்பாற்கடல் வீதிக்கு ஒப்பிலா அண்ட கோளத்தில் சூரிய உலகம் ஒரு பகுதியாகும். மில்லியன் விண்மீன் தொலைவுக் கிடையில் தென்படுவதபால்வீ அறிவியல் அறிஞார் இது பற்றிக் கூறும்போது, பால் வீதி வடிவின் திரட்சி என்கின்றனர். அத்திரட்சி சுழன்றுப்பின்னிய வேகத்தில் விண்மீன்கள் தோன்றின என்றும். சூரியனின் சூழற்சி முறை இங்ஙனம் உருப்பெற்றது என்றும் கூறுகின்றனர். இந்து மதப்புராணத்தில் உலகத் தோற்றம் குறித்த புராணக் கருத்து பாற்கடலோடு பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளது.

## இயற்கை சார் தொன்மம்

சங்க இலக்கியத்தில் தொன்மம் இயற்கை வருணனையாக அமைகின்றது. இயற்கை கடவுளர் நிலைக்கு உயர்ந்து தொன்மம் ஆகின்றது.

"நின் வெம்மையும் விளக்கும் ஞாயிற்குஉள

நின் சுன்மையும் சாயலும் திங்களும் உள

.....................

.....................

நின் வருவதலும் ஒடுக்கமும் மருந்தினுள"

இயற்கையின் இயல்பினை இறைத் தன்மையோடு ஒப்புமைப்படுத்திக் திருமாலை பதிவு செய்துள்ளதைக் காணலாம் (Somasundaram, 2009). திருமாலை முல்லை நிலத்தெய்வமாகப் போற்றும் தன்மையைக் காணலாம்.

"மாஅயோயேமா அயோயே!

மறுபிறப்பு அறுக்கும் மாசு இல் சேவடி

மணிதிகழ் உருபின் மாஅயோயே"

என்னும் பாடல் வரிகளில் உள்ளமாயோன் என்பது கருநிறமுடைய வன் என்று பொருள் குறிக்காமல் திருமால் என்று உணர்த்தியது (Somasundaram, 2009). திருமாலின் நிறம் கருநிறம், எனவே மாயோன் என்று திருமால் அழைக்கப்பட்டான்.

"மாயோன் மேயகாடுறை உலகமும்" (Ilampooranar, 2005) என்று தொல்காப்பியர் முல்லை நிலத்தெய்வம் திருமால் என்பதை குறிப்பிடுகிறார்.

"கரியவனைக் காணாத கண்ணென்னகண்ணே" என்று சிலப்பதிகாரம் திருமாலைப் பற்றிக் சுட்டிக்காட்டுகின்றது.

## புராணத் தொன்மம்

புராண இதிகாசங்களில் காணப்படும் கிளைக்கதைத் தொன்மங்கள் சங்க இலக்கியப் பரிபாடலில் காணப்படுகின்றன. காமன், சாமன்கதை, கருடன் தன் தாய் வின**தை**யின் துயர்போக்க அமிழ்த்தத்தைப் பெற்ற கதை, போன்றவற்றை பதிவு செய்கின்றன.

"ஏஎர் வயங்குபூண் அமரரை வெளவிய அமிழ்தின்
பயந்தோன் இடுக்கண் களைந்த புள்ளினை" (Somasundaram, 2009)

## திதி பற்றிய தொன்மம்

திதி சிறார் என்பவர் அசுரன் காசிப முனிவர்க்குத் திதி என்பவர்களிடம் அசுரர்கள் தோன்றினர் என்பது ஆதிப் பிரமனிபத்து பிரமர் பதின்கருள் ஒருவனாகிய காசிபன் விதி எனப்பட்டமையால் அவன் மக்களாகிய ஆதித்தர் பன்னிருவரும் விதி எனப்பட்டனர். வசுக்கள் எண்மரும் அட்டவசுக்கள் எனப்படுவர். உருபசி குதிரைப் பெட்டையாகினதைக் கண்டு நயந்து தானும் குதிரை வடிவினனாய் அவன்பாற் செல்லுகின்ற ஆதித்தனுடைய நாசிகைத் துணைகளால் இரண்டு வீரிய விந்துக்கள் வீழ, அவன் அச்சுவனித் தேவர், இருவர் பிறினீர் என்ற செய்தியும் அறிய முடிகிறது. இதன்மூலம் ஆதித்தர் பன்னிருவர், வசுக்கள்எண்மர், உருத்திரர் பதினொரவர், அச்சுவணித் தேவர் இருவர் ஆகிய முப்பத்துமூவரை இதன்மூலம் அறியலாம்.

“திதியின் சிறாரும் விரியின் மக்களும்

மாசு இல் எண்மரும் பதினொருகபிலரும்

தாமா இருவரும் தருமனும் மடங்கிலும்

மாம்மாய் நின்வயின் பரந்தவை உரைந்தோம்” (Somasundaram, 2009)

## முடிவுரை

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களுள் முத்தமிழ் இலக்கியம் எனப்படும் பரிபாடலில் திருமால் புராணத் தொன்மமாகவும் அறிவியல் சார் மற்றும்இயற்கை சார் தொன்மமாகவும் சமுதாய வளர்ச்சியினைகா சுட்டிக் காட்டும் தொன்மமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். பரிபாடலில் அமைந்த தொன்மக் கதைகளில் திருமால் முருகன் சிவபெருமான் ஆகிய கடவுள்களின் சிறப்பினை விளக்குவதாக அமைந்துள்ளன. பிற்காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்களின் முன்னோடியாகத் திகழும் முதல் நூல் பரிபாடல் ஆகும். என்ற கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் பரிபாடலில் பல இடங்களில் சமயம் தொடர்பான தொன்மக் கூறுகள் இடம் பெறுகின்றன. சங்க இலக்கிய நூல்களில் முருகனின் தோற்றம் பற்றி முழு வரலாற்றினையும் அறிய உதவும் நூல் ஆகும்.

## References


Alagesan, S., (2012) Tholkappiam Moolam, Sutha Publishers, Thoothukudi, India.

Ilampooranar, (2005) Tholgappiam, Porulathikaram, Saratha Publishers, Royapettai, Chennai, India.

Saranka Pani, (1972) Paripadal Uraithiran, Meiyappan publishers, Chennai, India.

Subramanian, P., (2004) Paripadal Moolamum uraiyum, New Century Book House, Chennai, India.

Subramanian, S.V., (2009) Sanga Ilakkiyam, Meiyappan publishers, 554, New Street, Chidambaram, India.

Somasundaram, P.S., (2009) Paripadal, L.K. Publication, Thyagaraya Nagar, Chennai, India.

Packiya Mary, (2013) Tamil Ilakkia Varalaru, New Century, Book House, Ambattur, Chennai, India.

Puliyur kesigan, (2009) Paripadal Moolamum Uraiyum, Saratha Publishers, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License